REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✱ The Official Organ Of The D.P.F.

வாக்குப்பதிவு நாட்களில்!

சம்பந்தப்பட்ட தொகுதிகளுக்கு விடுமுறை

சென்னை, ஜன. 21—

சென்னை மாநிலத்தில், பொதுத் தேர்தலின்போது வாக்குப் பதிவு நடைபெறும் நாட்களில் அந்தந்த் தொகுதிகளுக்குப் பொது விடுமுறையாக இருக்கும். சம்பந்தப்பட்ட தொகுதியைச் சேர்ந்த தனியார் நிறுவனங்களும் வர்த்தக நிறுவனங்களும் வாக்குப்பதிவு நாட்களில் தமது சிப்பந்திகளுக்கு விடுமுறை அளிக்குமாறு சர்க்காரால் கேட்டுக்கொள்ளப்படும்.

மலர் 4] சென்னை: தை 8உ திங்கள் (21—1—57) ★ ★ வெளியூர்: தை 9உ செவ்வாய் (22—1—57) [இதழ் 192

உறங்கிக் கிடக்கும் சட்டசபைக்கு உயிரூட்டுவோம்; தமிழ் மணம் கமழச் செய்வோம்

பட்டியல் வந்துவிட்டது! தோழர்களே! வெற்றிக்கான பணிகளில் தீவிரமாக ஈடுபடுவீர்!

திருவொற்றியூரில் பொதுச்செயலாளர் பரணி

"கழகத் தோழர்களே! ஆதரவாளர்களே! வரப்போகும் தேர்தலில், கழகத்தின் சார்பில் நிறுத்திவைக்கப்படும் அபேட்சகர்களின் முதல் பட்டியல் வெளியாகிவிட்டது. தேர்தல்தேதிகளும் அறிவிக்கப்பட்டுவிட்டன. காலம் மிகவும் சொற்பமாகவே உள்ளது. தோழர்களே! பம்பரமாகச் சுழல்வீர்! தேர்தல் பணிகளில் ஈடுபடுவீர்! அந்தந்தத் தொகுதிகளில் உள்ள கிளைக்கழகத்தவர்களும் ஆதரவாளர்களும், தேர்தலில் கழக அபேட்சகர் வெற்றி பெறுவதற்கான பணிகளில் துரிதமாக—தீவிரமாக ஈடுபடக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

"தேனீக்கள் எவ்வாறு பூக்கள் பலவற்றையும் நாடிச் சென்று தேனைச் சேகரித்துத் தேன்கூட்டிற்குக் கொண்டுவருகின்றனவோ, அவ்வாறே கழகத் தோழர்களும் தேனீக்களைப்போலச் சுறுசுறுப்பாக விடுகள் தோறும் சென்று ஓட்டுக்களைப் பெற்று, கழக அபேட்சகர்களை வெற்றிபெறச் செய்ய வேண்டுகிறேன்,"

என்று, பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், கடந்த 19—1—57 சனியன்று (பட்டியல் வந்த அன்று) மாலை, திருவொற்றியூர் தி.மு. கழகச் சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்கள்.

அடுத்து தோழர் முகவை—ஆர். எஸ். பாண்டியன் பேசுகையில், வாக்குரிமையின் புனிதத் தன்மையை எடுத்துரைத்து, அது விலைக்கு வாங்கப்படக்கூடியது என்று கருதுகிறவர்களுக்கு மக்கள் பாடம் கற்பிக்கவேண்டும் என்றும், மக்கள் கட்டாயம் தங்கள் வாக்குரிமையைப் பயன்படுத்த வேண்டும் என்றும் எடுத்துரைத்தார்.

அடுத்து பல்வேறு மன்றங்கள், கிளைக் கழகங்கள், தொழிலாளர்கள் சார்பில் தி.மு. கழகத் தேர்தல் நிதிக்குத் தொகைகள் வழங்கப்பட்டன. (விபரங்கள் பின்னால்)

இறுதியாக பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் அரியதோர் கருத்துரை ஆற்றினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:—

"தேர்தலில் ஈடுபடுகிற நமது தோழர்களிடத்தில் பணம் இல்லை; ஆனால், நம்மிடம் ஏராளமான உழைப்புச் செல்வம் இருக்கிறது. ஒவ்வொரு கழக உறுப்பினரும் ஆதரவாளரும், பல்லாயிரம் ரூபாய் செய்யும் வேலையைச் செய்யக் கூடியவர்கள் என்பதால், காங்கிரசாரிடமுள்ள பணத்தைக் கண்டு நாம் அஞ்சவில்லை.

"இன்று, காங்கிரஸ், தான் செய்த காரியங்களை — நாட்டுக்குப் புரிந்த நன்மைகளைக் காட்டி அல்ல ஓட்டுக் கேட்பது; தங்களின் இறந்த காலப் புகழைக் காட்டி, வெள்ளையருக்கு எதிராகத் தான் போராடிய காலத்திலிருந்த வீரர்களைக் காட்டி பண்டித நேருவையும் அவரது புகழையும் காட்டி, இத்தனைக்கும் மேலாக தங்களிடமுள்ள பணத்தைக் காட்டி ஓட்டுக் கேட்கின்றனர்.

"ஆனால் நாம், நமது இலட்சியத்தையும் கொள்கைகளையும் காட்டி, நமது கடந்த காலப் பணிகளைக் காட்டி, நம் கொள்கைகள் ஈடேற்றத்திற்காக நாம் போராடி வந்திருப்பதைக் காட்டி மக்களிடத்தில் ஓட்டுக் கேட்கிறோம்.

"மக்கள் மெல்லமெல்ல—ஆனால் நிச்சயமாகக் கழகத்தின் கருத்துக்களுக்குச் செவிமடுத்து வருகின்றனர். அவர்களோடு மேலும் நாம் தொடர்பு கொள்ளவும், அவர்களது ஆதரவை ஒருமுகப்படுத்தவும் வரப்போகும் தேர்தலில் நாம் ஈடுபடுவது பயன்படும்.

"இன்று நம்மைச் சிலர், 'தேர்தலில் ஈடுபட்டு இவர்கள் என்ன செய்யப் போகிறார்கள்?' என்று கேட்கின்றனர்.

"நான் கூற விரும்புகிறேன்—தி. மு. கழகத்தவர் சட்டசபைக்குச் சென்றால், சட்டசபை, சட்டசபையாக இயங்குமாறு செய்வோம்! உறங்கிக் கிடக்கும் சட்டசபைக்கு உயிரூட்டுவோம்! சட்டசபையில் தமிழ் மணம் கமழச் செய்வோம்! ஒரிருவர் நம்மில் அங்கு சென்றாலும் ஆணவத்தோடு அலையும் ஆட்சியாளரை—மக்களை மதிக்காமல் மமதையோடு நடந்துகொள்ளும் மந்திரிமார்களை ஆட்டி வைப்போம்! அவர்களை நெறிப்படுத்துவோம்! அவர்களது எதேச்சாதிகாரப் போக்கிற்கு எதிராகப் போராடுவோம் என்று கூற விரும்புகிறேன்.

"இந்த முயற்சியில், நாம் ஒன்றும் எப்படியேனும் வெற்றி பெற்றே தீரவேண்டும் என்று வெறி பிடித்து அலையவும் மாட்டோம்! தோல்வி கண்டு தொடை நடுங்கவும் மாட்டோம்!"

[பேச்சு முடியவில்லை; தொடர்ந்து வெளிவரும்]

✱

நிகழ்ச்சி

திருவொற்றியூர் தி. மு. கழகத் தேர்தல் நிதியளிப்புக் கூட்டம் 19—1—57 அன்று மாலை சன்னதித் தெருவில் நடைபெற்றது.

தோழர் டி. கே. பழனி தலைமை தாங்கினர்.

துவக்கத்தில் மாணவி எஸ். பி. சற்குணம் சிறிது நேரம் பேசினர்.

தெ. ஆ. பிரதமரின் மிரட்டல் எதிரொலி!

இந்தியக் கப்பல் நிறுவனம் 'நேரடி நடவடிக்கை'

கல்கத்தா, சன. 20—

தென்னாப்பிரிக்காவுக்கு எதிராக வர்த்தகத் துறையில் இந்தியா முற்றுகையிட்டு வருவதால், இந்தியக் கப்பல்களுக்கு தெ ஆ. துறைமுகங்களில் வசதியளிக்கப்படமாட்டாது என்று தென்னாப்பிரிக்க வெளிநாட்டு விவகார அமைச்சர் அறிவித்த 48 மணி நேரத்திற்குள் இந்தியக் கப்பல் போக்குவரத்து நிறுவனமொன்று, தென்னாப்பிரிக்கத் துறைமுகங்களுக்கு செல்லாதிருக்கும்படி அதன் கப்பல்களுக்கு உத்தரவு பிறப்பித்திருக்கிறது.

'நன்னம்பிக்கை முனை'யைச் சுற்றி சுமார் 10 அல்லது 12 கப்பல்கள் செல்வதாகவும், இவைகள் ஆப்பிரிக்கத் துறைமுகங்களுக்குச் செல்லாதென்றும் கூறப்பட்டிருக்கிறது.

பண்டிதர் போட்டி!

பண்டித நேரு அலகாபாத் தொகுதியிலிருந்து மக்கள் சபைக்குப் போட்டியிடுகிறார் எனத் தெரியவருகிறது.

★★★★★★★★-★★★★★★★-★★★

25—1—57-ல்!

தி. மு. கழக அபேட்சகர்கள் 2-ம் பட்டியல்

சென்னை 25—1—57 (வெளியூர் 26—1—57) 'நம் நாடு' இதழில் வெளிவருகிறது.

—தலைமைக் கழகம் (தி. மு. க)

✱✱✱✱-✱-✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱

'கம்யூனிஸ்டுகளின் பேச்சு முட்டாள்தனமானது; வெறும் ஹம்பக்'

'பலாத்காரத்தின் மூலம் ஆட்சியைக் கைப்பற்றக் கருதுகின்றனர்'

பஞ்சசீலப் பண்டிதரின் வருணனை!

"'பாட்டாளிகளின் சர்வாதிகார சாம்ராஜ்யம் நிறுவுவோம்' என்ற கம்யூனிஸ்டுகளின் பேச்செல்லாம் முட்டாள்தனமானதாகும்; வெறும் 'ஹம்பக்'!

"இந்த 'சர்வாதிகார சாம்ராஜ்யத்'தை நிறுவ முடியாது என்று நான் அறைகூவிச் சொல்கிறேன்,"

என்று, பண்டித நேரு, பம்பாயில் தேர்தல் பிரச்சாரத்தைத் துவக்கி வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

"இந்தியாவில் கம்யூனிஸ்டுகளைப் பின்பற்றுவோர் சொற்பமே; ஆனாலும், அவர்கள் பலாத்காரத்தின் மூலமாக ஆட்சியைக் கவிழ்ப்பது போன்ற கண்ணியக் குறைவான பலாத்காரச் செயல்கள் மூலம் ஆட்சிக்கு வர விழைகின்றனர்.

"அவர்கள், பார்லிமெண்டரி முறைகள் மூலம் ஆட்சியைக் கைப்பற்றலாம் என்று பேசினாலுங்கூட, பலாத்கார வழிகளிலேயே நம்பிக்கை வைத்திருப்பவர்கள்,"

என்றும் பண்டிதர் கூறியிருக்கிறார்.

மேலும் அவர் பேசியதாவது:—

'ஜனநாயகத் தத்துவங்கள் வளர்ச்சியுறாத காலத்தில் சுமார் 100 ஆண்டுகளுக்கு முன் எழுப்பப்பட்ட சில கோஷங்களைக் கூறிக்கொண்டு இவர்கள் இன்று வலம் வருகிறார்கள். அந்த நாட்களில் ஒரு நாட்டிலும் வயது வந்தோருக்கெல்லாம் வாக்குரிமை தரப்படவில்லை; தனி மனித உரிமைகள் போதுமானதாக இருக்கவில்லை. அந்தச் சூழ்நிலைகளில் காரல் மார்க்ஸ் எழுதிய—இன்று காலங்கடந்து போய்விட்ட புத்தகங்களைப் படித்துவிட்டு, அவற்றை ஒப்புவிக்கிறார்கள் இந்தக் கம்யூனிஸ்டுகள்!

"மேலும் அவர்கள் பல விவகாரங்களில், குழப்பங்களில் சிக்கித் தவிப்பதையும் நாம் காண்கிறோம்."

'நேருவுக்காக ஓட்டுப்போடாதீர்'

பண்டித நேரு கூறுகிறார்

"இந்தியாவை மேலும் பலப்படுத்துவதிலும், வளப்படுத்துவதிலும் காங்கிரஸ் கட்சி மேற்கொண்டிருக்கிற மகத்தான பணிகளை எண்ணிப் பார்த்து வாக்காளர்கள், மனச்சாட்சிப்படி ஓட்டளிக்க வேண்டுமே தவிர, நேருவுக்காக ஓட்டளிக்கக் கூடாது,"

என்று, பண்டித நேரு, பம்பாயில் தேர்தல் பிரச்சாரத்தைத் துவக்கி வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

வாக்காளர்களின் அடையாளச் சீட்டுகள்

கட்சியின் பெயர்-சின்னத்தையும் மட்டுமே அச்சடிக்க வேண்டும்

புதுடில்லி, சன. 20—

பொதுத் தேர்தலில் வாக்குப் பதிவு செய்யும்போது, வாக்காளர்களுக்கான அடையாளச் சீட்டுகள் மீது அபேட்சகர்கள் தங்கள் கட்சியின் பெயரையும், அவருக்கு ஒதுக்கப்பட்டுள்ள சின்னத்தையும் மட்டுமே அச்சடித்துக் கொள்ளலாம். வேறு எவ்வித 'சுலோக'ங்களை உபயோகப்படுத்தினால், அது, சாவடிக்குள் வாக்குகளைச் சேகரிப்பதாகுமென்றும், இது சட்டப்படி குற்றமாகுமென்றும் தேர்தல் குழு கூறியிருக்கிறது.

காங்கிரசுதான் ஜனநாயகக் கட்சியாம்!

"வரப்போகும் தேர்தலில் வாக்காளர் முன்னுள்ள பிரச்சினை எல்லாம், ஜனநாயகக் கட்சியான காங்கிரசுக்கா, அல்லது அராஜக சக்திகளுக்கா—எதற்கு ஓட்டளிப்பது என்பதுதான்; வாக்காளர்கள் விவேகமுடன் நடந்துகொள்ள வேண்டும்" என்றாராம்—பம்பாய் தேர்தல் கூட்டத்தில், பண்டித நேரு!

ஏஜெண்டுத் தோழர்களுக்கு:

சென்னை 25-1-57 (வெளியூர் 26-1-57) 'நம் நாடு' இதழில், தி. மு. கழக அபேட்சகர்களின் இரண்டாவது பட்டியல் வெளியாகிறது.

அதிகப் பிரதிகள் தேவைப்படும் ஏஜெண்டுத் தோழர்கள் உடனடியாகத் தெரிவிக்குமாறு கோரப்படுகிறார்கள்.

—பொறுப்பாளர்.

நம் நாடு

தி.மு.க.தினஇதழ் ஆசிரியர் இரா.நெடுஞ்செழியன்

சென்னை 21—1—'57 திங்கள்

இந்தி ஆதிக்கம் ஒழிய!

தமிழர்தம் வாழ்வு, அவர்தம் அளவிடற்கரிய வளம், பெருமைக்குரிய பண்பாடு, தொன்மைமிகு வரலாறு கூறும் இலக்கியங்கள் இவற்றை எல்லாம் சிதைக்கவும் கொள்ளையிடவும், சீரழிக்கவும் பாழ்படுத்தவுமாகப் பல நூற்றாண்டுகளாகக் கட்டுப்பாடாக மேற்கொள்ளப்பட்டு வரும் 'பகீரதப் பிரயத்தன'ங்கள் எல்லாம் வெற்றிபெற முடிந்ததில்லை. எத்தனையோ படையெடுப்புகளுக்குப் பிறகும் தமிழின் இனிமையைக் குறைக்கவோ பெருமையைக் குலைக்கவோ எவராலும் முடிந்ததில்லை. ஆனாலும், தமிழ்—தமிழரின் வாழ்வுக்கு உயிர்போன்ற தமிழ் ஆரியத்தின் படை எடுப்பால்—ஆங்கிலத்தின் ஆதிக்கத்தால் எத்தனையோ சிறுமைகளை, சொல்லொணுக் கொடுமைகளை அனுபவிக்க வேண்டியிருந்தது—இருக்கிறது. இந்த இழிநிலை இன்னும் பரிபூரணமாகத் துடைக்கப்படவில்லை.

இப்போதுதான் தமிழ், தமிழர் வாழும் மாநிலத்தின் ஆட்சிமொழியாக அரியாசனம் ஏறியிருக்கிறது; நிர்வாகம் முழுவதும் இன்னும் தமிழில் நடைபெறவில்லை—இனிதான் அதற்கான ஏற்பாடுகளையே படிப்படியாக மேற்கொள்ளவிருக்கின்றனர் ஆட்சியாளர்!

தமிழ் ஆட்சிமொழியாக்கப் படுவதற்கே தமிழர்கள் இடைவிடாது, பன்னெடுங்காலம் போராட வேண்டியிருந்தது.

மேலும், தாய்மொழியைத் தமிழாகக்கொண்ட மக்களில் இன்னும் நூற்றுக்கு எண்பத்திரண்டு பேர் வரை தங்கள் தாய்மொழியில் பேசுவதைத் தவிர, எழுதவோ படிக்கவோ தெரியாதவர்களாயிருக்கின்றனர். அவர்கள் கல்வியறிவு பெறுவதற்குரிய வாய்ப்புகளைப் பெற்றிருக்கவில்லை. வாய்ப்புகளைப் பெற்றுத் தருவதற்கு, அவர்களுடையதாக — அவர்களுக்கென இன்று ஒரு துரைத்தனம் இல்லை. இருக்கிற ஒரு துரைத்தனமோ, டில்லியை 'தேவனு'க ஏற்றுக்கொண்டிருக்கும் 'பூசாரி'யாக விளங்குகிறது; அந்த டில்லித் தேவனுக்கு இந்த நாட்டு மக்களின் வாழ்வைப் பலியிடும் 'சுயநலப் பூசாரி'யாக விளங்குகிறது!

இந்த நிலையில், இந்தி என்ற வடநாட்டு மொழியை இந்த நாட்டு மக்கள்மீது கட்டாயமாகத் திணித்து, 'இதனையும் நீங்கள் கற்றுக வேண்டும்' என்கிறது டில்லி! 'ஆமாம்' என்கிறது, இந்த நாட்டில் அந்த டில்லிக்கு ஏஜெண்டுகளாக உள்ள மாநில சர்க்கார்! இது நியாயமா?

இன்றைக்கு சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்பே தமிழகம இந்தக் கேள்வியைக் கேட்டதற்கு ஆயிரம் பேருக்கு சிறை அனுபவங்களையும், இரு இளம் வாலிபர்களுக்கு வீரமரணத்தையும் வழங்கினர், அன்று ஆட்சி பீடத்திலிருந்து இந்தியைத் திணித்த ஆச்சாரியார்! அன்று தமிழர்கள் இந்திக்கு எதிராகக் கிளப்பிய போர்க்குரல், இன்றும் ஓசை நயம் குன்றுமல் ஒலித்துக் கொண்டேயிருக்கிறது. அவ்வப்போது, ஆட்சியாளரும் முயற்சித்துக்கொண்டே இருக்கிருர்கள்—தமிழர்கள், எதிர்ப்புக் கூர்மழுங்காமல் பார்த்துக் கொண்டிருக்கிருர்கள்!

ஆனல் டில்லி ஏகாதிபத்தியவாதிகள், அவர்கள் தயாரித்த அரசியல் சட்டத்தையே அவமதிக்கும் வகையிலும், 'அதனை அமுல் செய்வோம் — அதன் வழி நடப்போம்' என்று, எடுத்துக்கொண்ட பிரமாணத்தை மீறி விசுவாசம் கெட்ட வழியிலும் இந்தித் திணிப்பை வேகமாக்கி வருகின்றனர்.

'15 ஆண்டுகள்வரை, இந்தியுடன் ஆங்கிலமும் சேர்ந்தே உபயோகிக்கப்பட வேண்டும்' என்று கூறும் அரசியல் சட்ட விதி, டில்லிப் பெரியவர்களால் துராக்கிரமமாகக் கற்பழிக்கப் பட்டு, நிலை குலைந்து, தலை குனிந்து நின்றுகொண்டிருக்கிற காட்சிதான், தபால்-தந்தி-இரயில்வே-பாதுகாப்பு முதலிய பலதுறைகளும், அரசியல் சட்டம் துவங்கி ஐந்தாண்டுகளுக்குள்ளேயே இந்திமயமாகிவருவதாகும்.

பெரிய மனிதர்களின் இந்த அவசர அவசரமான இந்தித் திணிப்பு நடவடிக்கைக்குக் காரணம் எல்லாம், இந்தித் திணிப்பின் மூலம் நாளுக்கு நாள் நிலவுகிற பிளவு விரிவாகிவருகிறது என்பதை மறந்த நிலையில், அவர்கள், வடக்கிற்கும் தெற்கிற்கும் இடையே ஒற்றுமைப் பாலம் போட்டுவிட முயற்சித்துவரும் வெட்கக் கேடுதான்!

இந்த இலட்சணத்தில், இந்தி கட்டாயமில்லை என்றுவேறு அடிக்கடி கூறி, 'உறுதி மொழி' என்ற சொல்லுக்கு அவமானம் தேடித்தந்து வருகின்றனர், அந்தப் பெரியவர்கள்!

கடந்த வாரத்தில், மத்தியக் கல்வி ஆலோசனைக் குழுவினர் இந்தியையும் உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் கட்டாயமாகப் படித்தாகவேண்டும் என்று யோசனை தெரிவித்திருக்கின்றனர். டில்லி இதனை ஏற்றுக் கொண்டு மாநிலங்களுக்குத் தாக்கீது பிறப்பிக்கத்தான் போகிறது.

ஆனல் தமிழர்கள், வடநாட்டுப் பெரியவர்களின் உறுதி மொழிகளில் மயங்கியோ, கவர்ச்சிகரமான வார்த்தை அடுக்குகளுக்கிடையில் சாதுரியமாகச் சொருகப்பட்டிருக்கும இந்தித் திணிப்பை உணர்ந்து கொள்ளாமலோ ஏமாந்துவிடுவர் என்று எவரும கருதத்தேவை இல்லை.

டெல்லியின் மூன்றுமொழித் திட்டம், கட்டாய இந்தியின் முன்னறிவிப்பு என்பதைத் தமிழ் மக்களுக்கு நினைவூட்ட விரும்புகிறோம.

எந்த அவசியத்திற்காகவும் தமிழர்கள் இந்தி கறகத்தேவை இல்லை. இந்தி மொழிக்காகத் தமிழர், தங்கள் அறிவு, ஆற்றல், பொருள், பொன்னுன காலம் இவற்றை விரையமாக்கத் தயாராக இல்லை என்பதை வடவர் உணர வேண்டாமா? இந்தி ஆதிக்கம் ஒழிக்கப்பட வேண்டாமா? அவ்வப்போது தலைநீட்டும் இந்தித் திணிப்புத் திட்டங்கள் முறியடிக்கப்பட வேண்டாமா?

இந்தித் திணிப்பு கேட்டு தமிழர்களின் குமுறும் நெஞ்சங்கள் கொந்தளிக்கும் கடலாயிருக்கின்றன என்பதை வடவர் அறிய—தமிழர் இந்தியை ஏற்கார் என்பதை உணர தமிழ் மக்கள் தங்கள் எதிர்ப்பை ஒருமுகப்படுத்தி ஆக்கபூர்வமாகத் தெரிவிக்கவேண்டாமா? அதற்கான வாய்ப்பு, தேர்தல்! தேர்தல்தான்! தமிழரே! தாய்மொழி காக்க அன்று முதல் இன்றுவரை இடைவிடாது தியாகம் பல புரிந்து போராடி வரும் இந்தி எதிர்ப்புப் படையின் முன்னேடிகளான தி. மு. கழகத்தினருக்கு வாக்களித்து அவர்களை வெற்றி பெறச் செய்வதே, இந்தித் திணிப்பை நீங்கள் ஆக்கபூர்வமாகக் கண்டிக்கிறீர்கள் — எதிர்க்கிறீர்கள் என்பதாகும்! இதனை மறவாதீர்! இந்தி ஒழிய—தாய்மொழி காப்பாற்றப் பட—தி. மு, கழக அபேட்சகர்களுக்கே வெற்றி தேடித் தாருங்கள்!

நவீன இந்தியாவில் சாதிமுறையின் ஆதிக்கம்

இந்திய விஞ்ஞான காங்கிரசில் ஆய்வுரை

கல்கத்தா, ஜன. 18—

இந்திய விஞ்ஞான காங்கிரஸ் மாநாட்டில், நவீன கால இந்தியாவில் சாதிகளின் ஆதிக்கம் குறித்துப் பலர் கருத்தறிவித்திருக்கிறார்கள்.

பேராசிரியர் எம். என். சீநிவாசன் உட்பட பலர் தந்துள்ள கருத்துக்கள், ஆழ்ந்த சிந்தனைக்கும் ஆராய்ச்சிக்கும் உரியனவாகும்.

"அரசியல் அதிகார ஆதிக்கம் பெறுவதிலும், பிரதிநிதித்துவ சபைகளில் இடம் பிடிப்பதிலும், அவை இயங்குவதிலும் சாதிகள் மகத்தான பங்கு வகிக்கின்றன. இந்தியாவில் அதிகார மாற்றம் நிகழுவது, சாதி முறையினல் சிக்கலாக்கப்பட்டிருக்கிறது.

"சில மாநிலங்கள் அமைவது, மக்கள் சர்க்காருடன் நெருங்கிய தொடர்பு கொள்ளப் பயன்படும் என்றாலும், அவை அந்த மாநிலங்களில் உள்ள பிரதான சாதியினரின் ஆதிக்கத்திற்குள் வந்துவிடும் கொடுமையையும் உள்ளடக்கிக் கொண்டிருக்கின்றன என்பது இன்றைய இந்தியாவின் சிக்கல்களுள் ஒன்றாகும்.

"பஞ்சாயத்துகளுக்கு விரிவான அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை, ஸ்தலத்தில் பிரதான சாதியினரிடை மிகுந்த ஆசையை மூட்டியிருக்கிறது; தனது சாதிக்காரர்களுக்குக் கிடைத்துள்ள அதிகார பலத்தால் கிடைக்கும் பணத்தைச் செலவிட்டு நன்மைகள் செய்யலாம் என்பதே அந்த ஆசை."

இந்தக் கருத்துக்களை பேராசிரியர் சீனிவாசன் தெரிவித்திருக்கிறார். தனது கருத்துக்களுக்கு ஆதாரமாக அவர் சென்னையில் உள்ள பார்ப்பனர்—பார்ப்பனரல்லாதார் பிரச்சினை, ஆந்திராவில் கம்மாக்கள்—ரெட்டிகள் போட்டி, மைசூரில் ஒக்கலிகாரர்கள்—லிங்காயத்துகள் போட்டி, கேரளத்தில் இர்துக்கள்—கிருத்துவர்கள் போட்டி, வடநாட்டில் நிலப்பிரபுக்கள்—குத்தகைதார் போட்டி இவற்றைக் கொண்டதாகவும் கூறியிருக்கிறார்.

தீண்டாமை

மேலும் அவர் கூறியிருப்பதாவது :—

"தீண்டாமை ஒழிக்கப்பட வேண்டுமென எல்லோரும் கூறுகிருர்கள்—மனச்சாட்சி படைத்தோர் அனைவரும் கூறுகின்றனர். ஆனல், சாதிமுறைகளை அனைவரும் எந்த வித எதிர்ப்புமின்றி பரிபூரணமாக ஏற்றுக்கொள்ளுகின்றனர்; சாதிமுறைகளை வன்மையாகக் கண்டிப்போர் கூட ஏற்றுக்கொள்கின்றனர்.

"பல தலைவர்கள் பொருளாதார, சமூக முன்னேற்றத்திற்காகப் பாடுபடும் சாதி இயக்கங்களைத் தீதானவை என்று கருதக்கூடாது என்றே கருத்தறிவிக்கின்றனர்.

"சாதிமுறை மறையவேண்டும் என்று பேசுகிற அரசியல்வாதிகூட, ஓட்டுப்பெறும் சக்தி இந்த சாதி முறைக்கு இருப்பதைக்கண்டு உண்மையிலேயே திகைப்படைய நேரிடுகிறது. சாதிமுறை மிகப் பெரிய தீங்கு பயப்பது என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்தாகவேண்டிய காலம்நெருங்கிவிட்டது. அதனுடன் எந்தவகைத் தொடர்பும் கொள்வது கூடாது."

சென்னை மாநிலத்தில்

12 சோப்புத் தொழிற்சாலைகள்

சென்னை மாநிலத்தில் உணவுக்குப் பயன்படாத எண்ணெய் வகைகளைக் கொண்டு சோப்புத் தயாரிக்கும் 12 தொழிற்சாலைகளை அமைப்பதற்கான திட்டம் ஒன்றை மத்திய உற்பத்தி இலாகா அங்கீகரித்திருப்பதாகத் தெரிகிறது இத்தொழிற்சாலை நிர்மாணத்திற்கு அவ்விலாகா ரூ 91,250 மான்யமாகவும் அனுமதித்துள்ளதாம்!

உடனடியாக மாற்றுமாறு சர்க்கார் உத்தரவு

சென்னை, சன. 17—

சென்னை நகரில் ஓடும் பஸ்களில், 31-வது 'ரூட்' வண்டிகளில் 'அம்பட்டன் வாராவதி' என்று எழுதப்பட்டிருக்கும் போர்டுகளை மாற்றிவிடுமாறு, மாநில முடிதிருத்துவோர் சங்கத்தவர் மாநிலப் போக்குவரத்து அமைச்சர் பரமேசுவரனிடம் மகஜர் ஒன்று தந்திருந்தனர்.

இதனையொட்டி, அந்த போர்டுகளை உடனடியாக மற்றிவிடுமாறும் சர்க்கார், அந்த இலாகாவிற்கு உத்தரவிட்டிருக்கின்றனராம்.

தேர்தல் வருகிறது-

தெரிந்து கொள்ளுங்கள்!

தமிழ் நாட்டில் 3,10,00,000 - மக்கள் இருக்கிருர்கள்; இதில், 21-வயதுக்கு மேற்பட்ட ஆண்-பெண் எல்லோரும் வாக்களிக்கலாம்.

1,75,49,035 பேர்கள் வாக்காளர்களாகப் பதிவு செய்து கொண்டிருக்கின்றனர்; இவர்கள் மட்டும் வரப்போகும் பொதுத் தேர்தலில் வாக்களிக்க முடியும்.

ஆயிரம் வாக்காளர்களுக்கு ஒரு ஓட்டுச் சாவடி என்ற விகிதத்தில் சுமார் 22,300 ஓட்டுச் சாவடிகள் தமிழ்நாட்டில் ஏற்படுத்தப்படும்.

இரும்பினுல் 1,20,000 புதிய வாக்குப் பெட்டிகள் செய்யப்பட்டிருக்கின்றன; இதற்காக ரூ. 8 - இலட்சம் செலவிடப்பட்டிருக்கிறதாகத் தெரிகிறது.

தமிழ் நாட்டில், வாக்களிப்பதற்காக 3 மைல் தூரத்திற்கு மேல் செல்லவேண்டிய அவசியமில்லாத வகையில் ஓட்டுச் சாவடிகள் அமைக்கப்படும்.

'விசைத்தறித் திணிப்பால் கிராமப் பொருளாதாரமே சீர்குலைந்துவிடும்'

விளைவுகள் பற்றிப் பரிசீலனை செய்ய குழு ஒன்று நியமிக்குமாறு கோரிக்கை

ஐதராபாத், சன. 19—

"இந்தியா முழுமையிலும் 35,000 விசைத் தறிகளைப் புகுத்துவது என்ற சர்க்காரின் கொள்கை நடைமுறைக்குக் கொண்டுவரப்படுமானல், அதன் விளைவாக கிராமப் பகுதிகளில் இப்போது நிலவிவருகின்ற வேலையில்லாத் திண்டாட்டம் மேலும் அதிகமாகி விடுவதுடன், ஓரளவு நிலை பெற்றிருக்கிற இப்போதைய கிராமாந்திரப் பொருளாதார நிலையும் சீர்குலைந்துவிடும்,"

என்று, அகில இந்தியக் கைத்தறிக் குழு உறுப்பினரான எம் சோமப்பா, சர்க்காரின் விசைத்தறிக் கொள்கையின் விளைவுகள் பற்றிக் கூறுகையில் குறிப்பிட்டுள்ளார்.

"தற்போது நாடு முழுமையிலுமுள்ள கைத்தறிகளின் எண்ணிக்கை சுமார் 22 இலட்சம் என்றும், இவைகளால் சுமார் 60 இலட்சம் மக்கள் தங்கள் தங்கள் சொந்த இடங்களிலேயே வேலை பெற்று வருகின்றனர் என்றும் கணக்கிடப்பட்டிருக்கிறது.

"இதே நேரத்தில், சர்க்கார் மேற்கொள்ளவிருக்கும் திட்டப்படி பார்த்தால் ஒரு விசைத்தறி மட்டும் சுமார் 10 கைத்தறிகள் செய்யக் கூடிய வேலையைக் குறிப்பிட்ட நேரத்தில் செய்து முடித்துவிடும் என்பது கருதத்தக்கது.

"இவைகளையெல்லாம் மனத்தில் இருத்திக்கொண்டு பார்க்கும் போது, உற்பத்தி செய்யப்படுகிற துணியின் அளவு ஒன்றே சர்க்கார் எதிர்பார்க்கிற அம்சமாக இருக்குமானல், சர்க்கார் அதனை அடைவதற்கான ஒரே நேர்வழி, ஆலைத் துறைகளில் இருக்கும் தறிகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதுதான்; வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்கி அனைவருக்கும் வேலை கிடைக்கச் செய்யவேண்டும் என்ற நோக்கத்துடன் சர்க்கார் இந்தக் கொள்கையை மேற்கொள்வதாக இருந்தால் அது, 'விசைத்தறிகளைப்புகுத்துவதானது, வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கு உலகிலேயே இதுவரை மேற்கொள்ளப்பட்டிராத ஒரு அரிய திட்டம்' என்று நினைத்துக்கொள்ளும் ஒரு தவறான கருத்தாகும," என்றும் அவர் அறிவித்திருக்கிறார்.

மேலும் அவர், இந்த விசைத்தறித் திணிப்புத் திட்டம் மிக அவசர அவசரமாகச் செய்யப்பட்டிருக்கிற ஒரு திட்டம் என்றும், அத்திட்டத்தைப் புகுத்து முன், அதனுல் ஏற்படக்கூடிய விளைவுகள் குறித்துப் புனர்பரிசீலனை செய்ய உயர் அதிகாரம் பெற்ற குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டுமென்றும் ஆலோசனை கூறியிருக்கிறார்.

மேற்கண்ட கருத்துக்களை அறிவித்த அவர், கைத்தறித் தொழிலையே நம்பி வாழும் சுமார் 4 இலட்சம் சென்னை, ஆந்திர மாநில கைத்தறியாளர்கள், இவ்விசைத்தறித் திணிப்பால் பெருமளவுக்குப் பாதிக்கப்படுவர் — நசுக்கப்படுவர் என்பதையும் விளக்கியிருக்கிறார்.

சென்னை மாநிலப் பாராளுமன்றத் தொகுதிகள் விவரம்

மக்கள் சபைக்கு சென்னை மாநிலம் 41 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும்; இதற்காக சென்னை மாநிலம் 34 தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது; இவைகளில் 2 இடங்கள் கொண்ட ஏழு தொகுதிகளில், 7 ரிசர்வ் இடங்களுக்கு தாழ்த்தப்பட்ட வகுப்புப் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். தொகுதிகள் பற்றிய விபரங்கள் இங்கு தரப்படுகின்றன :—

செங்கற்பட்டு மாவட்டம்:

செங்கற்பட்டு—இரட்டை உறுப்பினர்கள்,

செங்கற்பட்டு மாவட்டத்தில் திருவள்ளூர் தாலுகா பகுதிகள் தவிர மற்றவை முழுவதும்.

திருவள்ளூர் :

செங்கற்பட்டு, திருவள்ளூர் தாலுகா போன்ற சில பகுதிகள்; வட ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த அரக்கோணம் தாலுகா; வாலாஜாபேட்டை தாலுகாவில் ஒரு பகுதி.

★

வட ஆற்காடு மாவட்டம்

வேலூர்—இரட்டை உறுப்பினர்.

வேலூர், குடியேற்றம், செய்யாறு, வந்தவாசி தாலுகாக்கள். வாலாஜாபேட்டை தாலுகாவில் ஒரு பகுதி; ஆரணி தாலுகாவில் ஒரு பகுதி.

திருவண்ணாமலை :

திருவண்ணாமலை, போளூர் தாலுகாக்கள்; செங்கம் தாலுகாவில் ஒரு பகுதி; ஆரணி தாலுகாவில் மற்றொரு பகுதி.

திருப்பத்தூர் :

திருப்பத்தூர் தாலுகா, செங்கம் தாலுகாவில் மற்றொரு பகுதி; சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த அரூர் தாலுகா; சேலம் மாவட்டத்தில் கிருஷ்ணகிரி தாலுகாவைச் சேர்ந்த ஒரு பகுதி.

★

தென்னாற்காடு மாவட்டம்:

சிதம்பரம்—இரட்டை உறுப்பினர்கள்.

தென்னாற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த சிதம்பரம், விருத்தாசலம், கள்ளக்குறிச்சி தாலுகாக்கள்; திருக்கோவிலூர் தாலுகாவின் ஒரு பகுதி; திருச்சி மாவட்டம் ஜெயங்கொண்டான் தாலுகாவில் ஒரு பகுதி.

திண்டிவனம் :

தென்னாற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த திண்டிவனம், செஞ்சி தாலுகாக்கள்; விழுப்புரம் தாலுகாவில் ஒரு பகுதி.

கடலூர் :

விழுப்புரம் தாலுகாவில் ஒரு பகுதி; திருக்கோவிலூர் தாலுகாவில் மற்றொரு பகுதி; கடலூர் தாலுகா.

★

தஞ்சை மாவட்டம் :

நாகப்பட்டினம்—இரட்டை உறுப்பினர்கள்

சீர்காழி, மாயவரம், நன்னிலம், நாகப்பட்டினம், மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி தாலுகாக்கள்

கும்பகோணம் :

கும்பகோணம், பாபநாசம், தாலுகாக்கள், தஞ்சாவூர் தாலுகாவில் ஒரு பகுதி; ஒரத்தநாடு தாலுகாவில் ஒரு பகுதி.

தஞ்சாவூர் :

பட்டுக்கோட்டை, அறந்தாங்கி தாலுகாக்கள்; ஒரத்தநாடு தாலுகாவின் ஒரு பகுதி; தஞ்சை தாலுகாவில் மற்றொரு பகுதி.

★

திருச்சி மாவட்டம் :

பெரம்பலூர் :

பெரம்பலூர் தாலுகா; ஜெயங்கொண்டான் தாலுகாவில் ஒரு பகுதி; முசிறி தாலுகாவில் ஒரு பகுதி.

கரூர் :

குளித்தலை] தாலுகா; கரூர் தாலுகாவில் ஒரு பகுதி; திருச்சி தாலுகாவில் ஒரு பகுதி; குளத்தூர் தாலுகாவில் ஒரு பகுதி.

திருச்சி :

திருச்சி தாலுகாவில் மற்றொரு பகுதி; லால்குடி தாலுகாவில் மற்றொரு பகுதி; முசிறி தாலுகாவில் ஒரு பகுதி.

புதுக்கோட்டை :

ஆலங்குடி, திருமயம் தாலுகாக்கள்; குளத்தூர் தாலுகாவில் மற்றொரு பகுதி; இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த திருப்பத்தூர் தாலுகா.

★

இராமநாதபுரம் மாவட்டம்

இராமநாதபுரம் :

இராமநாதபுரம், சிவகங்கை, திருவாடானை, பரமக்குடி தாலுகாக்கள்.

திருவில்லிபுத்தூர் :— இரட்டை உறுப்பினர்கள்.

திருவில்லிபுத்தூர், சாத்தூர், அருப்புக்கோட்டை, முதுகுளத்தூர் தாலுகாக்கள்; திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த கோவில்பட்டி தாலுகா, சங்கரன்கோயில் தாலுகாவில் ஒரு பகுதி.

★

கன்னியாகுமரி மாவட்டம்

நாகர்கோயில் :

கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த செங்கோட்டை, தோவாளை தாலுகாக்கள், அகஸ்தீசுவரம் தாலுகாவில் ஒரு பகுதி ஆகியவைகள் நீங்கலாக மற்றப் பகுதிகள்.

★

சேலம் மாவட்டம் :

கிருஷ்ணகிரி :

ஓசூர், தர்மபுரி தாலுகாக்கள்; கிருஷ்ணகிரி தாலுகாவின் ஒரு பகுதி.

திருச்செங்கோடு :

திருச்செங்கோடு தாலுகா; ஓமலூர் தாலுகாவின் ஒரு பகுதி.

சேலம் :

சேலம் தாலுகா, ஓமலூர் தாலுகாவைச் சேர்ந்த ஒரு பகுதி. இராசிபுரம் தாலுகாவில் ஒருபகுதி.

★

திருநெல்வேலி மாவட்டம்

திருச்செந்தூர் :

திருச்செந்தூர், நாங்குனேரி தாலுகாக்கள்; அம்பாசமுத்திரம் தாலுகாவில் ஒரு பகுதி; கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த தோவாளை தாலுகா, அகஸ்தீசுவரம் தாலுகாவில் ஒரு பகுதி.

திருநெல்வேலி :

திருநெல்வேலி, திருவைகுண்டம் தாலுகாக்கள்; தென்காசி தாலுகாவில் ஒரு பகுதி; சங்கரன்கோயில் தாலுகாவில் ஒரு பகுதி.

தென்காசி :

தென்காசி தாலுகாவில் மற்றொரு பகுதி; அம்பாசமுத்திரம் தாலுகாவில் ஒரு பகுதி; சங்கரன்கோயில் தாலுகாவில் ஒரு பகுதி; கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த செங்கோட்டை தாலுகா.

★

மதுரை மாவட்டம்

பெரியகுளம் :

பெரியகுளம், கொடைக்கானல் தாலுகாக்கள்; திருமங்கலம் தாலுகாவில் ஒரு பகுதி.

மதுரை :

திருமங்கலம் தாலுகாவில் மற்றொரு பகுதி; மதுரை தாலுகாவில் ஒரு பகுதி.

திண்டுக்கல் :—இரட்டை உறுப்பினர்கள்

பழனி, திண்டுக்கல், நிலக்கோட்டை, மேலூர் தாலுகாக்கள்; மதுரை தாலுகாவில் ஒரு பகுதி.

★

நீலகிரி மாவட்டம்

நீலகிரி :

நீலகிரி முழுவதும்; கோவை தாலுகாவில் ஒரு பகுதி; பல்லடம் தாலுகாவில் ஒரு பகுதி.

கடலூர் தி. மு. கழகத் தோழர்கட்கு :

"கடலூர் நகர எல்லைக்குள் சில நாட்களுக்குமுன் யாரோ சிலர், தாங்கள் தி. மு. கழகத்தின் செயற்குழு உறுப்பினர்கள் என்றும், கே. வி. கே. சாமி மன்றம் திறக்கப் போவதாகச் சொல்லியும், பொதுமக்களிடமும் கழகத் தோழர்களிடமும் நிதி வசூல் செய்திருப்பதாகத் தெரியவருகின்றது. ஆகையால், இனி யாராகிலும் நிதி கேட்டால், நகர தி. மு. கழகத்தின் அனுமதியுடன் எனது கையொப்பம் இருப்பதையும் கவனித்து நிதி கொடுக்குமாறு பொது மக்களையும் கழகத் தோழர்களையும் கேட்டுக்கொள்வதுடன், கே. வி. கே. சாமி மன்றத்தின் பெயரால் நிதி திரட்டியுள்ள தோழர்களை விரைவில் கண்டுபிடித்து அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும், அந்தப் பணத்தை வசூலித்துத் தேர்தல் நிதிக்கு அனுப்புவதற்கும் முடிவு செய்துள்ளதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்"

என்று, கடலூர் நகர தி மு கழகப் பொருளாளர் தோழர் எஸ் அஜீஸ் அறிவிக்கிறார்.

பின்தள்ளப்பட்ட வகுப்புமக்களுக்கு கல்விச் சலுகை

சென்னை சர்க்கார் ரூ. 15 இலட்சம் ஒதுக்குகிறது

சென்னை, சன. 18—

பின்தள்ளப்பட்ட வகுப்பினருக்குக் கல்விச் சலுகை அளிப்பதற்காக சென்னை சர்க்கார் ரூ. 14,94,000 செலவிட அனுமதி அளித்திருப்பதாகத் தெரிகிறது.

கல்லூரிப் படிப்புக்குப் பெரும் பகுதியும், உயர்நிலைப் பள்ளிப் படிப்புக்கு ஒரு குறிப்பிட்ட சதவிகிதமும் தொகை தரப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

முடி திருத்துவோர், உடை வெளுப்போர் ஆகிய வகுப்புப் பிள்ளைகளுக்கு, தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குத் தருவதுபோன்ற முழு இலவசக் கல்வி தரப்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

மேலும், ரூ. 26,85,000 வரை, தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு வீடு கட்டிக்கொள்வதற்காகவும் சர்க்கார் ஒதுக்கித் தந்திருக்கிறார்கள் என்றும் தெரிகிறது.

தொழில்கள்

தாழ்த்தப்பட்டோருக்குத் தொழில்கள் கிறவித் தருவதற்கு ரூ. 4,28,750 செலவிடப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது.

நெய்வேலி பகுதியில் உரத் தொழிற்சாலை?

ரூ. 21 கோடி திட்டச் செலவில் உருவாகக்கூடும்?

புதுடில்லி, சன. 18—

நெய்வேலியில் தோண்டி எடுக்கப்படும் பழுப்பு நிலக்கரியைக் கொண்டே, சிக்கனமான அளவில், நெய்வேலித் திட்டப்பகுதியில் ஒரு உரத் தொழிற்சாலை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிகிறது.

நைட்ரஜன் கலப்புள்ள பல்வேறு ரக உரங்களைத் தயாரிப்பதற்காக மொத்தம் ரூ. 21 கோடி தேவைப்படுமென மதிப்பிடப்பட்டிருக்கிறதாம்.

கழகச் செய்திகள்

சென்னை :

19-வது வட்டம் :

1—1—57 மாலை 6 மணிக்கு சென்னை 19-வது வட்ட தி. மு. கழகம், வாழைமா நகர் வள்ளுவர் மன்றச் சார்பில், வாழைமா நகரில் தோழர் ஏ. எம். வரதராசன் தலைமையில் டாக்டர் அம்பேத்கார் மறைவுக்கு அனுதாபப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் ஏ. வி. பி. ஆசைத்தம்பி, ஆர். ஜார்ஜ், ஏ. எம். வரதராசன், தோழியர் சத்தியவாணிமுத்து ஆகியோர் சொற்பொழிவாற்றினர். கூட்டத்தில், தோழர் மு கோதண்டபாணி அவர்களது பெண் மகவுக்கு தோழியர் சத்தியவாணிமுத்து அவர்களால் 'இராமு அம்மையார்' எனப் பெயரிடப்பட்டதின் நினைவாக தி மு. கழகத் தேர்தல் நிதிக்கு ரூ. 1 நன்கொடையும், உண்டியல் மூலம் வசூலான ரூ 3—7—0-ம் தேர்தல் நிதிக்கு தரப்பட்டது.

34-வது வட்டம் :

14—1—57 காலை 7 மணிக்கு வட்டக் கழகப் புதிய பணிமனையில், தோழர் இரா. சம்பந்தன் அவர்களால் கழகக் கொடியேற்றி வைக்கப்பட்டது. தோழர்கள் வ. சங்கரநாராயணன், தி. சு. கிள்ளிவளவன், என். டி. எழுமலை ஆகியோர் பேசினர்.

36-வது வட்டம் :

6—1—57 காலை 11 மணிக்கு தோழர் ஏ. சி. இராசரத்தினம் இல்லத்தில் தோழர் கோ. செங்குட்டுவன் தலைமையில் நடைபெற்ற கிளைக் கழகப் பொது உறுப்பினர் கூட்டத்தில் நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். செயலாளர்: மா. இளங்கோ; துணைச் செயலாளர்: எம். ஏ. துரை; பொருளாளர்: கே. எஸ். துரை; மாவட்டப் பிரதிநிதிகள்: ஏ. சி. இராசரத்தினம், அ. கண்ணபிரான்.

அய்யம்பாளையம்:

7—1—57-ல், அய்யம்பாளையத்தில், தோழர் கே. எஸ். மலையப்பன் தலைமையில், கிளைக் கழகச் சார்பில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் சி. பி. சிற்றரசு, டி. வி. மூர்த்தி, டி. ஆர் முத்துச்சாமி ஆகியோர் பேசினர்.

திருமலைப்பட்டி :

8—1—57 மாலை 5 மணிக்கு திருமலைப்பட்டி தி. மு. கழகக் கிளை துவக்க விழாப் பொதுக் கூட்டம் தோழர் ஜி பி. சோமசுந்தரம் தலைமையில் நடைபெற்றது தோழர் ஜி. பி. சோமசுந்தரம் அவர்கள் கிளைக் கழகத்தைத் துவக்கி வைத்துப் பேசினார்கள். தோழர் வி. காளியப்பன் அண்ணா படத்தைத் திறந்துவைத்துப் பேசினார்.

கோட்டநத்தம்பட்டி

14—1—57-ல், கிளைக் கழக அமைப்புக்கூட்டம், தோழர் ஏ. வேலுச்சாமி தலைமையில் நடைபெற்றது. நிர்வாகிகளும் செயற்குழுவினரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். செயலாளர்: மா. கல்யாணசுந்தரம்; துணைச் செயலாளர்: மு முத்துக்கருப்பன்; பொருளாளர்: சி. இராமன்; மாவட்டப் பிரதிநிதி: ப. கோபால்.

கோவில்பட்டி :

14—1—57 மாலை 4 மணிக்கு தோழர் அ. சு. சி. பொன்னுசாமி தலைமையில் நடைபெற்ற நகரக் கிளை உறுப்பினர் கூட்டத்தில், பொருளாளர் தோழர் எஸ். எம். காசி, அவர்களது விலகல் கடிதம் ஏற்றுக் கொள்ளப்பட்டதுடன் துணைச் செயலாளர் தோழர் பி. வி. இரங்கசாமி தொடர்ந்து மூன்று கூட்டங்களுக்கு வராததால், அவரை துணைச் செயலாளர் பொறுப்பிலிருந்தும் செயற்குழு உறுப்பினர் பதவியிலிருந்தும் விலக்கியும்; அவர்களுக்குப் பதிலாகத் தோழர்கள் ரா. சம்பிராசன், கோ. தேவராசன் ஆகியோர் முறையே பொருளாளர், துணைச் செயலாளராகத் தேர்ந்தெடுத்தும் முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

கடலூர் ஓ. டி.

10—1—57 இரவு 9½ மணிக்கு கடலூர் ஓ. டி. தி. மு கழகக்கிளை பொது உறுப்பினர்கூட்டம், கழகப்பணிமனையில் தோழர் எஸ். அஜீஸ் தலைமையில் நடைபெற்ற போது, பொருளாளர் தோழர் இபுராகிம் அவர்களை விலக்கியும், அவருக்குப் பதிலாகத் தோழர் க. இலட்சுமணனை பொருளாளராகத் தேர்ந்தெடுத்தும், மற்றும் பல முடிவுகளும் மேற்கொள்ளப்பட்டன.

சென்னை, கோவைத் தோழர்களுக்கு :

சென்னை, கோவை ஆகியவைகளின் பாராளுமன்றத் தொகுதிகளின் விவரம் முறையே 2—1—57, 3—1—57 'நம் நாடு' இதழ்களில் வெளியாகியுள்ளதெனபதை நினைவு படுத்துகிறோம்.

செய்திச் சுருள்

★

கடலூர்—புதுப்பாளையம் :

6-1-57 இரவு 9 மணிக்குப் புதுப்பாளையத்தில், தோழர் கே. இளங்கோ தலைமையில் நடைபெற்றக் கூட்டம் ஒன்றில் நகர திராவிட இளைஞர் முன்னணி அமைக்கப்பட்டு நிர்வாகிகளும்தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—செயலாளர்: கே. இளங்கோ; துணைச் செயலாளர்: சண்முகம்; பொருளாளர்: க. முத்து. மற்றும் 11 பேரடங்கிய செயற்குழுவும் தேர்ந்தெடுக்கப்பட்டது தேர்தலில் தி. மு. கழக அபேட்சகரை ஆதரிப்பதென்றும், தி. மு. கழகத் தேர்தல் நிதி அளிப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது.

திண்டிவனம் :

12-1-57 மாலை 5 மணிக்கு திண்டிவனம்கிடங்கல்— தாழ்த்தப்பட்டோர் சம்மேளனச் சார்பில் தோழர் ஏ லோகநாதன் தலைமையில் டாக்டர் அம்பேத்கார், தோழர் கே. எம் சாமி ஆகியோர் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் மௌன ஊர்வலமும், மாலை 6½ மணிக்கு எண். 2 பெருமாள்கோயில் மைதானத்தில் தோழர் எஸ். ஏ. எழுமலை தலைமையில் அனுதாபப் பொதுக்கூட்டமும் நடைபெற்றது. தோழர்கள் எஸ். நடராசன் [தி. மு. க.], சி. கிருஷ்ணன், தளசிகாமணி, ரங்கநாதன், ஜே. பாலசுந்தரம், டி. வி. புஷ்பராஜ், ஆர். முருகேசன், டி. வி மீனாட்சிசுந்தரம் ஆகியோர் இரங்கலுரையாற்றினர்.

பர்மா :

பர்மா தி. மு. கழக முன்னணி வீரர் தோழர் முதலை முத்துமாறன் தாயகம் திரும்பினதையொட்டி, 8-12-56 மாலை 6 மணியளவில், இரங்கூன், டல்லா, சிக்குதாம்புவிலுள்ள கே. வி. கே. சாமி படிப்பகத் தோழர்களால், தோழர் ஆ. குமார் தலைமையில் வழியனுப்பு விழா நடைபெற்றது. தோழர்கள் பலர் பாராட்டுரை வழங்கினர். தோழர் முத்துமாறன் நன்றி தெரிவித்துக்கொண்டார்.

தமிழகத்தில் மார்ச் 1, 4, 6, 8, 11 தேதிகளில் தேர்தல்

சென்னை நகரில் 8-ந் தேதி வாக்குப் பதிவு

தேர்தல் கமிஷன் நிர்ணயங்கள் விவரம்

சென்னை ஜன. 19—

சென்னை மாநிலத்தில் தேர்தல்கள் ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு மார்ச் 1, 4, 6, 8, 11—என்று 5 நாட்களில் நடைபெறும் என்று தேர்தல் கமிஷன் அறிவித்துள்ளது.

சட்டசபைக்கு 167 தொகுதிகளிலிருந்து 38 தாழ்த்தப்பட்டோருக்கான தனி இடங்கள் உட்பட 205 உறுப்பினர்களும், மக்கள் சபைக்கு 34 தொகுதிகளிலிருந்து 41 உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்படுவர் என்பது தெரிந்ததே !

மார்ச் 1-ந் தேதி வெள்ளி அன்று — கும்பகோணம், திருச்செங்கோடு, தென்காசி, புதுக்கோட்டை, பெரியகுளம், பொள்ளாச்சி, திண்டிவனம், திருவண்ணாமலை ஆகிய எட்டு மக்கள் சபைத் தொகுதிகளிலும், அவற்றில் உள்ளடங்கிய சட்டசபைத் தொகுதிகளிலும் தேர்தல் நடைபெறும்.

மார்ச் 4-ந் தேதி திங்களன்று—செங்கற்பட்டு, திருச்செந்தூர், ஸ்ரீ வில்லிபுத்தூர், கிருஷ்ணகிரி, கோபிசெட்டிப் பாளையம், பெரம்பலூர் ஆகிய ஆறு மக்கள்சபைத் தொகுதிகளிலும், அவற்றைச் சேர்ந்த சட்டசபைத் தொகுதிகளிலும் தேர்தல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

மார்ச் 6-ந் தேதி புதன்கிழமை அன்று—தஞ்சாவூர், கடலூர், சேலம், திருப்பத்தூர், திருவள்ளூர், திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல், நீலகிரி ஆகிய எட்டு மக்கள்சபைத் தொகுதிகளிலும், அவற்றில் உள்ள சட்டசபைத் தொகுதிகளிலும் தேர்தல் நடைபெறும்.

நான்காவது பிரிவாக மார்ச் 8-ந் தேதி வெள்ளியன்று—சென்னை-வடக்கு, சென்னை-தெற்கு, நாமக்கல், சிதம்பரம், இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய ஆறு மக்கள் சபைத் தொகுதிகளிலும், அவற்றில் உள்ள சட்டசபைத் தொகுதிகளிலும் தேர்தல் நடைபெறும்.

கடைசியாக ஐந்தாம் பிரிவாக, மார்ச் 11-ந் தேதி திங்கள் அன்று—வேலூர், நாகப்பட்டினம், கரூர், நாகர்கோயில், மதுரை, கோவை ஆகிய ஆறு மக்கள்சபைத் தொகுதிகளிலும், அவற்றில் உள்ள சட்டசபைத் தொகுதிகளிலும் தேர்தல் நடைபெறும்.

முதல் நாள்: மார்ச் 1.

★

மக்கள் சபைத் தொகுதிகள்	சட்டசபைத் தொகுதிகள்
திருவண்ணாமலை	ஆரணி, போளூர், துரிஞ்சாபுரம், திருவண்ணாமலை.
திருச்செங்கோடு :	தாரமங்கலம், மேட்டூர், சங்கரி, திருச்செங்கோடு.
திண்டிவனம் :	சத்தியமங்கலம், செஞ்சி, திண்டிவனம், வளவனூர்.
கும்பகோணம் :	ஆடுதுறை, கும்பகோணம், பாபனாசம், திருவையாறு.
புதுக்கோட்டை :	திருமயம், ஆலங்குடி, திருக்கோட்டியூர், காரைக்குடி.
தென்காசி :	அம்பாசமுத்திரம், கடையம், தென்காசி, சங்கரன்கோயில்.
பெரியகுளம் :	உத்தமபாளையம், போடிநாயக்கனூர், கொடைக்கானல், தேனி.
பொள்ளாச்சி :	உடுமலைப்பேட்டை, பொள்ளாச்சி, கோயில்பாளையம், தர்மபுரம்.
செங்கற்பட்டு :	மதுராந்தகம், செங்கற்பட்டு, சைதாப்பேட்டை, பொன்னேரி, ஸ்ரீபெரும்புதூர், உத்திரமேரூர், காஞ்சிபுரம்.
கிருஷ்ணகிரி :	கிருஷ்ணகிரி, உத்தனபள்ளி, ஹோசூர், பென்னாகரம், தர்மபுரி.
பெரம்பலூர் :	லால்குடி, டி. பாலூர், அரியலூர், பெரம்பலூர்.

இரண்டாம் நாள்: மார்ச் 4.

★

மக்கள் சபைத் தொகுதிகள்	சட்டசபைத் தொகுதிகள்
ஸ்ரீவில்லிபுத்தூர் :	முதுகுளத்தூர், அருப்புக்கோட்டை, சாத்தூர், சிவகாசி, ஸ்ரீவில்லிபுத்தூர், கோயில்பட்டி, கடம்பூர்.
திருச்செந்தூர் :	திருச்செந்தூர், சாத்தான்குளம், ராதாபுரம், நாங்குநேரி, கன்னியாகுமரி.
கோபிச்செட்டிபாளையம் :	பெருந்துறை, பவானி, கோபிச்செட்டிபாளையம், நம்பியூர்.

மூன்றும் நாள்: மார்ச் 6.

★

மக்கள் சபைத் தொகுதிகள்	சட்டசபைத் தொகுதிகள்
திருவள்ளூர் :	கும்மிடிபூண்டி, திருவள்ளூர், அரக்கோணம், சோளிங்கனூர்.
திருப்பத்தூர் :	செங்கம், வாணியம்பாடி, திருப்பத்தூர், அரூர்.
சேலம் :	ஏர்க்காடு, சேலம் I, சேலம் II, வீரபாண்டி.
கடலூர் :	விழுப்புரம், உளுந்தூர்ப்பேட்டை, கடலூர், நெல்லிக்குப்பம்.
தஞ்சாவூர் :	தஞ்சை, கந்தர்வகோட்டை, அதிராம்பட்டினம், பட்டுக்கோட்டை, அறந்தாங்கி.
திருச்சிராப்பள்ளி :	திருச்சிராப்பள்ளி I, திருச்சிராப்பள்ளி II, ஸ்ரீரங்கம், முசிறி.
திண்டுக்கல் :	நிலக்கோட்டை, மேலூர், வட மதுரை, வேடசெந்தூர், திண்டுக்கல், ஆத்தூர், ஒட்டன்சத்திரம், பழனி.
நீலகிரி :	சூலூர், அவினாசி, மேட்டுப்பாளையம், கூனூர், உதகமண்டலம்.

நான்காம் நாள்: மார்ச் 8.

★

மக்கள் சபைத் தொகுதிகள்	சட்டசபைத் தொகுதிகள்
சென்னை—வடக்கு :	வண்ணாரப்பேட்டை, ஹார்பர், பேசின்பிரிட்ஜ், பெரம்பூர்.
சென்னை—தெற்கு :	ஆயிரம்விளக்கு, எழும்பூர், திருவல்லிக்கேணி, மயிலாப்பூர், தியாகராயநகர்.
நாமக்கல் :	நாமக்கல், சேந்தமங்கலம், இராசிபுரம், ஆத்தூர், அரவக்குறிச்சி, காங்கேயம், சென்னிமலை, ஈரோடு.
சிதம்பரம் :	கள்ளக்குறிச்சி, திருக்கோயிலூர், கல்லூர், விருத்தாசலம், புவனகிரி, சிதம்பரம், ஜெயங்கொண்டான்.
இராமநாதபுரம் :	சிவகங்கை, திருவாடானை, மானாமதுரை, பரமக்குடி, இராமநாதபுரம்.
திருநெல்வேலி :	தூத்துக்குடி, ஸ்ரீ வைகுண்டம், திருநெல்வேலி, ஆலங்குளம்.

ஐந்தாம் நாள்: மார்ச் 11.

★

மக்கள் சபைத் தொகுதிகள்	சட்டசபைத் தொகுதிகள்
வேலூர் :	செய்யாறு, வந்தவாசி, ஆற்காடு, இராணிப்பேட்டை, குடியேற்றம், வேலூர், ஆம்பூர்.
நாகப்பட்டினம் :	சீர்காழி, மாயூரம், நன்னிலம், நாகப்பட்டினம், திருத்துறைப்பூண்டி, மன்னார்குடி.
கரூர் :	அன்னவாசல், கரூர், குளித்தலை, பஞ்சப்பட்டி, மணப்பாறை.
நாகர்கோயில் :	நாகர்கோயில், குளச்சல், பத்மநாபபுரம், கிள்ளியூர் , விளவங்கோடு.
மதுரை :	உசிலம்பட்டி, திருமங்கலம், மதுரை—கிழக்கு, மதுரை—(மத்தியப் பகுதி), திருப்பரங்குன்றம்.
கோயம்புத்தூர் :	திருப்பூர், பல்லடம், கோயம்புத்தூர்-1, கோயமபுத்தூர்-2.

வேண்டுகோள்

இந்தத்திங்கள் 20-ந் தேதிக்கு மேல் நான் பேச ஒப்புக் கொண்டிருக்கின்ற கூட்டங்களை ஏற்பாடு செய்ய வேண்டாம் என்று கழகத் தோழர்களைப் பணிவன்பாகக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

—சி. பி. சிற்றரசு

டி. கே. சீனிவாசன் தாயகம் திரும்பினர்

சென்னை, ஜன. 21—

இலங்கை சென்றிருந்த தோழர் டி. கே. சீனிவாசன் அவர்கள், 19—1—57 காலை விமான மூலம் சென்னைக்குத் திரும்பினர்.

வேலூர் (சேலம்) தி.மு.க. பொது உறுப்பினர்கட்கு :

23—1—57 மாலை 5 மணிக்கு, வேலூர் சக்தி புகைப்பட நிலையத் திற்குப் பின்புறம் உள்ள இல்லத்தில் தோழர் அ. பெருமாள் தலைமையிலும் தோழர் வி. காளியப்பன் முன்னிலையிலும், கிளைக் கழகப் பொதுஉறுப்பினர் கூட்டம் நடைபெறும். 'தேர்தலில் நமது கடமை' எனும் பொருள் பற்றிப் பேசப்படும்.

சென்னை 4-வது வட்டம் கே. வி. கே. சாமி நினைவு மன்ற உறுப்பினர்கட்கு :

23—1—57 இரவு 8 மணிக்கு மேற்படி மன்றச் செயற்குழுக் கூட்டம், மன்றப் பணிமனையில் நடைபெறும். 'தேர்தலில் நம் கடன்', மன்ற வரவு-செலவுகள் ஆகியவை பரிசிலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

இலங்கை தமிழர் உரிமைப் போர்

கொழும்பு, ஜன. 20—

இலங்கை வடக்கு, கிழக்கு மாநிலங்களில் உள்ள தமிழர்கள் கார்களிலுள்ள எண் பலகையில் சிங்கள மொழியில் எழுத்து பொறிக்க வேண்டும் என்ற ஆட்சியாளரின் உத்தரவை எதிர்த்து; முன் அறிவித்தபடி இன்று போராட்டம் துவக்கியுள்ளனர்.

எண் பலகையில் தமிழ் எழுத்தைப் பொறித்து நூற்றுக்கணக்கான கார்கள் ஊர்வலமாகச் சென்றன; ஒருவரும் கைது செய்யப்படவில்லை.

போராட்டம் தொடர்ந்து நடைபெற்று வருமெனத் தெரிகிறது.

சங்கு கணேசன் உண்ணாநோன்பு

சென்னை, ஜன. 21—

மொழிவாரி மாநில அமைப்புக்குப் பிறகு சென்னை மாநிலத்திற்கு 'தமிழ் நாடு' என்று பெயரிடாததைக் கண்டு, 77 நாட்கள் உண்ணாநோன்பிருந்து உயிர் நீத்தார் சங்கரலிங்கனார்.

இப்போது சங்கு கணேசன் கடந்த 6 நாட்களாக திருவல்லிக்கேணியில் உள்ள கோயில் மண்டபமொன்றில் உண்ணா நோன்பை மேற்கொண்டுள்ளார்.

மைசூர் மாநில சர்க்கார் ஊழியர் ஊதிய உயர்வு

மைசூர் மாநிலத்தில் குறைந்த ஊதியம் பெறும் சர்க்கார் ஊழியர்களின் ஊதிய விகிதங்களை உயர்த்துவதற்காக இந்திய சர்க்கார் ரூ. $1\frac{3}{4}$ கோடிவரையில் நிதி உதவி அளிக்கக்கூடுமெனத் தகவல் தரப்பட்டிருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.